## ஆதிதிராவிடர்/பழங்குடியினர் மற்றும் கிருத்துவ மதம் மாறிய ஆதிதிராவிடர் மாணவ/மாணவியர்களுக்கான கல்வி உதவித்தொகை விபரங்கள்

| வ. எண் | திட்டத்தின் பெயர் மற்றும் விபரம் | தகுதி | அணுக வேண்டியவர்கள் |
|---|---|---|---|
| 1. | **10ஆம் வகுப்பிற்கு மேற்பட்ட படிப்பிற்கான (PODT MATRIC) மைய அரசு கல்வி உதவித்தொகை திட்டம்.**<br><br>பள்ளி மற்றும் கல்லூரிக்கு செலுத்த வேண்டிய கட்டாய மற்றும் திருப்பி அளிக்கப்படாத (All Compulsory Fees and Non-refunded Fees) அனைத்துக் கட்டணங்கள் மற்றும் பராமரிப்புத் தொகை ஆகியவை கல்வி உதவித்தொகையாக வழங்கப்படும்.<br><br>பராமரிப்பு படிகள்<br><br>1) விடுதியில் அல்லாதோர்<br><br>மாதம் ரூ.230/- முதல் ரூ.550/- வரை.<br><br>2) விடுதியில் உள்ளோர்<br><br>மாதம் ரூ.380/- முதல் ரூ.1200/- வரை. | 11ஆம் வகுப்பும் அதற்கு மேலும் படிக்கும் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின மாணவ / மாணவியர் மட்டும்.<br><br>ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின மாணவ / மாணவியர்களின் பெற்றோர் ஆண்டு வருமானம் ரூ.2.00 இலட்சத்திற்கு மிகாமல் இருக்க வேண்டும். (அனைத்து வகை வருமானமும் சேர்த்து கணக்கிடப்படும்) | பள்ளித் தலைமை ஆசிரியர்கள், கல்லூரி முதல்வர்<br><br>பிற மாநிலங்களில் பயிலும் தமிழகத்தைச் சேர்ந்த ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின மாணவ / மாணவியர் |
| 2. | **சுயநிதி பொறியியல் / மருத்துவ கல்வி நிறுவனங்களில் பயிலும் ஆதிதிராவிடர் / பழங்குடியின மாணவ / மாணவியர்களுக்கு.**<br><br>விடுதியில் தங்காது பயில்பவர்களுக்கு மாதம் ரூ.550/-.<br><br>விடுதியில் தங்கிப் பயில்பவர்களுக்கு மாதம் ரூ.1200/-.<br><br>இது தவிர சுயநிதி கல்வி நிறுவனங்களில் பொறியியல், மருத்துவம் பயிலும் ஆதிதிராவிடர் / பழங்குயினர் மாணவ / மாணவியர்களுக்கு அரசால் அங்கீகரிக்கப்பட்ட படிப்புகளுக்கு அரசு நியமித்த சுயநிதிக் கல்லூரிகளுக்கான கட்டணக்குழு நிர்ணயித்துள்ள திருப்பி செலுத்தப்படாத கட்டாயக் கட்டணங்கள் கீழ்க்கண்டவாறு வழங்கப்படும். | பொறியியல் படிப்பு / மேற்படிப்பு / மருத்துவ படிப்பு<br><br>பெற்றோர் / பாதுகாவலர் ஆண்டு வருமானம் ரூ.2,00,000/-க்கு மிகாமல் இருக்க வேண்டும். | கல்லூரி முதல்வரை அணுக வேண்டும். |

| படிப்பு | Non / Accredited Course (தரச் சான்றில்லா படிப்பு)ரூ. | Accredited Course (தரச் சான்றுள்ள படிப்பு)ரூ. | Manage-ment Quota (தரச் சான்று மற்றும் தரச்சான்றில்லா மேலாண்மை பங்கு)ரூ. |
|---|---|---|---|
| Under Graduate Engi-neering Course | 32,500/- | 40,000/- | 62,500/- |
| M.E. / M.Tech / M.Arch. | 45,000/- | 50,000/- | - |
| MBA, MCA | 25,000/- | 30,000/- | - |
| PGDBM/ PGDBA | 20,000/- | | - |
| **MEDICAL** | | | |
| PSG Institute of Medical Sciences | | | 2,50,000/- |
| Sree Moogambika Institute of Medical Science, Kulasekharam | | | 2,30,000/- |
| Melmaruvathur Adiparasakthi Institute of Medical Sciences & Research, Melmaruvathur | | | 2,50,000/- |
| Karpaga Vinayaga Institute of Medical Sciences, madhurantagam | | | 2,25,000/- |
| Sri Muthukumaran Medical College and Hospital, Chennai | | | 2,25,000/- |
| Chennai Medical College Hospital & Research Centre, Trichy | | | 2,25,000/- |
| BDS | | | 85,000/- |

| | | | | |
|---|---|---|---|---|
| | MDS (CLINICAL) | 1,50,000/- | | |
| | MDS (PARA CLINICAL) | 80,000/- | | |
| | B.Sc (Nursing) | 30,000/- | | |
| | M.Sc (Nursing) | 50,000/- | | |
| | B.Pharmacy | 28,000/- | | |
| | M.Pharmacy | 45,000/- | | |
| | B.P.T. | 28,000/- | | |
| | M.P.T. | 45,000/- | | |
| | B.O.T. | 28,000/- | | |
| | Siddha / Ayurveda | 30,000/- | | |
| | Homeopathy | 33,000/- | | |
| | Naturopathy | 25,000/- | | |
| 3. | **சுகாதாரமற்ற தொழிலில் தூய்மைப்பணி புரிவோரின் குழந்தைகளுக்கு 10-ஆம் வகுப்பு வரை படிப்பிற்கான (சீந ஆயவசஉை) மைய அரசின் உதவித்தொகைத் திட்டம்.**<br><br>உதவித்தொகை:<br><br>விடுதியில் அல்லாதோர்<br><br>1ம் வகுப்பு முதல் 10ம் வகுப்பு வரை மாதம் ரூ.110/-<br><br>விடுதியில் தங்கி பயில்பவர்கள்.<br><br>1ம் வகுப்பு முதல் 10ம் வகுப்பு வரை மாதம் ரூ.700/-<br><br>சிறப்பு மானியம்<br><br>விடுதியில் அல்லாதோர் ஆண்டுக்கு ரூ.750/-<br><br>விடுதியில் உள்ளோர் ஆண்டுக்கு ரூ.1000/- | | துப்புரவுத் தொழில் செய்வோரின் குழந்தைகள்.<br><br>(தோல் பதனிடுதல்,தோல் தொழில்,<br><br>சாதி மத பேதம் இல்லை.<br><br>ஆண்டு வருமான வரம்பு இல்லை. | பள்ளித் தலைமை ஆசிரியர் / மாவட்ட ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அலுவலர். |
| 4. | **உயர்கல்வி சிறப்பு உதவித்தொகை** | | ஆதிதிராவிடர் / பழங்குடியினர் / கிருத்துவ மதம் மாறிய | கல்லூரி முதல்வர்கள் / மாவட்ட ஆதிதிராவிடர் மற்றும் |

| | | | |
|---|---|---|---|
| | பட்டப்படிப்பிற்கு ஆண்டிற்கு ரூ.7500/-<br><br>முதுகலை பட்டப்படிப்பு மற்றும் தொழில்நுட்ப பட்டபடிப்பிற்கு ஆண்டிற்கு ரூ.8000/- மானியமாக வழங்கப்படுகிறது. | ஆதிதிராவிடர் மாணவ / மாணவியர்கள்.<br><br>ஆண்டு வருமானம் ரூ.1.00 இலட்சம்.<br><br>அரசு விடுதி அல்லாமல் கல்லூரி விடுதிகளில் தங்கி பயில்பவர்கள். | பழங்குடியினர் நல அலுவலர். |
| 5. | **அயல்நாடு சென்று உயர்கல்வி பயில உதவித்தொகை.**<br><br>பொறியியல், தொழில்நுட்பவியல் மற்றும் அறிவியல் சார்ந்த துறைகளில் இந்தியாவில் இல்லாத படிப்புகளில் ஆராய்ச்சிப் படிப்பை மேற்கொள்ள விரும்பும் SC/ST மாணவர்களை ஊக்குவித்தல். | பெற்றோர் / பாதுகாவலரின் ஆண்டு வருமானம் ரூ.3.00 இலட்சத்திற்கு மிகாமல் இருக்க வேண்டும்.<br><br>ஆதிதிராவிடர் / பழங்குடியினர் / கிருத்துவ மதம் மாறிய ஆதிதிராவிடர் மாணவ / மாணவியர்கள். | ஆதிதிராவிடர் நல ஆணையரகம், சென்னை - 5. |
| 6. | 10-ம் வகுப்பிற்கு மேற்பட்ட படிப்பிற்கான (Post Matric) மாநில அரசின் சிறப்பு உதவித்தொகை திட்டம்.<br><br>பராமரிப்பு படிகள்:<br><br>விடுதியில் அல்லாதோர் மாதம் ரூ.100/- முதல் ரூ.175/- வரை.<br><br>விடுதியில் தங்கி பயில்பவர்கள் மாதம் ரூ.175/- முதல் ரூ.350/- வரை. | ஆதிதிராவிடர் / பழங்குடியினர் / கிருத்துவ மதம் மாறிய ஆதிதிராவிடர் மாணவ / மாணவியர்கள்.<br><br>பெற்றோர் / பாதுகாவலரின் ஆண்டு வருமானம் ரூ.1.00 இலட்சத்திற்கு மிகாமல் இருக்க வேண்டும். | பள்ளி தலைமை ஆசிரியர்கள் / கல்லூரி முதல்வர்கள் / மாவட்ட ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அலுவலர். |
| | **2. கல்வி கட்டணச் சலுகைகள்** | | |
| 7 | **கற்பிப்புக் கட்டணச் சலுகை**<br><br>அரசு மற்றும் அரசு நிதி உதவி பெறும் கல்வி நிறுவனங்களில் பயிலும் ஆதிதிராவிட / பழங்குடியின / கிருத்துவ மதம் மாறிய ஆதிதிராவிட மாணவ / மாணவியர் கற்பிப்புக் கட்டணம் செலுத்துவதிலிருந்து முழுவதுமாக விலக்களிக்கப்படுகிறது. | வருமான வரம்பு ஏதும் நிர்ணயிக்கப்-படவில்லை. | பள்ளி தலைமை ஆசிரியர்கள் / கல்லூரி முதல்வர்கள் / மாவட்ட ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அலுவலர். |

| | | | |
|---|---|---|---|
| 8. | **பட்டப்படிப்பு பயிலும் மாணவ / மாணவியர்க்கு சிறப்புக் கட்டணம் மற்றும் தேர்வுக் கட்டணச் சலுகைகள்.**<br><br>பட்டப்படிப்பு பயிலும் ஆதிதிராவிட / பழங்குடியின / கிருத்துவ மதம் மாறிய ஆதிதிராவிட மாணவ / மாணவியர் சிறப்புக் கட்டணம் மற்றும் தேர்வுக் கட்டணம் செலுத்துவதிலிருந்து முழுவதுமாக விலக்களிக்கப்படுகிறது. | ஆதிதிராவிட / பழங்குடியின / கிருத்துவ மதம் மாறிய ஆதிதிராவிட மாணவ / மாணவியர்கள் பெற்றோர் / பாதுகாவலர் ஆண்டு வருமானம் மைய அரசு நிர்ணயித்துள்ள வருமான வரம்பிற்கு மேற்பட்டிருந்தாலும் அம்மாணவர்களுக்கு வழங்கப்படும். | கல்லூரி முதல்வர்கள். |
| 9. | **முதுகலைப் பட்டம் படிக்கும் மாணவியர்க்கு சிறப்புக் கட்டணம் மற்றும் தேர்வுக் கட்டணச் சலுகைகள்.**<br><br>முதுகலைப் பட்டப்படிப்பு படிக்கும் மாணவியர்க்கு சிறப்புக் கட்டணம் மற்றும் தேர்வுக் கட்டணம் செலுத்துவதிலிருந்து விலக்களிக்கப்படுகிறது. | இத்திட்டத்தின் மூலம் பயனடைய வருமான வரம்பு ஏதும் நிர்ணயிக்கப்பட-வில்லை.<br><br>ஆதிதிராவிட / பழங்குடியின / கிருத்துவ மதம் மாறிய ஆதிதிராவிட மாணவ / மாணவியர்கள் மட்டும். | கல்லூரி முதல்வர்கள். |
| 10. | **சிறப்புக் கட்டணச் சலுகை**<br><br>பொதுப்பள்ளிகளில் பயிலும் மாணவ / மாணவியர்க்கான சிறப்புக் கட்டணத்தை கல்வித்துறை திரும்ப வழங்குகிறது.<br><br>தமது பள்ளிகளில் பயிலும் மாணவ / மாணவியர்க்கான சிறப்புக் கட்டணத்தை ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை வழங்குகிறது. | அனைத்து ஆதிதிராவிட / பழங்குடியின / கிருத்துவ மதம் மாறிய ஆதிதிராவிட மாணவ / மாணவியர்கள்<br><br>வருமான வரம்பு இல்லை. | |
| 11. | **தேர்வுக் கட்டணம் / விண்ணப்பக் கட்டணம் / பதிவுக் கட்டணச் சலுகைகள்**<br><br>10 மற்றும் 12ஆம் வகுப்பு பயிலும் ஆதிதிராவிட / பழங்குடியின / கிருத்துவ மதம் மாறிய ஆதிதிராவிட மாணவ / மாணவியர் அனைவருக்கும் தேர்வுக் கட்டணங்கள் செலுத்துவதிலிருந்து விலக்களிக்கப் படுகிறது.<br><br>மேலும் அரசு / அரசு உதவி பெறும் கல்லூரிகளில் பட்டப்படிப்பு, பட்ட மேற்படிப்பு மற்றும் தொழிற்கல்வி பயிலும் மாணவ / மாணவியர்க்கு விண்ணப்பக் கட்டணம் மற்றும் பதிவுக் கட்டணம் செலுத்துவதிலிருந்து விலக்களிக்கப்படுகிறது. | | |
| 12. | **பெண்கல்வி ஊக்குவிப்பு உதவித்தொகை:**<br><br>3 முதல் 5ம் வகுப்பு பயிலும் ஆதிதிராவிட / பழங்குடியின | அனைத்து ஆதிதிராவிட / பழங்குடியின மாணவியர்கள் | பள்ளி தலைமை ஆசிரியர்கள் |

| | | | |
|---|---|---|---|
| | மாணவியர் - ரூ.500/-<br><br>6ம் வகுப்பு பயிலும் ஆதிதிராவிட / பழங்குடியின மாணவியர் - ரூ.1000/- | வருமான வரம்பு இல்லை. | |